DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel : 647-344-6600
4158, Kingston Road, Unit 3 Scarborough. ON. M1E 2M4
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

விஷேட பதிப்பு
Special Edition
25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
416-752-1524
416-752-6703

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

உதயம் 1292/1 CHEIF EDITOR: R.N LOGENDRALINGAM TUESDAY - JAN 12, 2020

# யாழ் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அதே இடத்தில் மீண்டும் எழுகிறது

* துாபியை இடிக்க உத்தரவிட்ட துணைவேந்தரே தன் கைகளால் அடிக்கல்லை நாட்டினார்.
* உண்ணாவிரதமிருந்த மாணவர்களுக்கு நீராகத்தை வழங்கி அதனையும் முடித்து வைத்தார்.
* நினைவுத்தூபியை மீண்டும் அமைப்பதற்குரிய செலவை எற்பதற்கு திருகோணமலையிலுள்ள ஒரு அன்பர் முன்வந்துள்ளார்.




யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்திருந்த புனிதமான முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நினைவுத் தூபியை இடிக்க உத்தரவிட்ட துணைவேந்தரான பேராசிரியர் சி. சற்குணராசாவினால் திங்கட்கிழமையன்று தன் கைகளால் அடிக்கல்லை நாட்டினார. அத்தடன் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட சிறிய கொட்டகையொன்றின் கீழ் அமர்ந்திருந்து உண்ணாவிரதமிருந்த சில மாணவர்களுக்கு தனது கைகளால் நிராகத்தையும் உண்ணாவிரத்தை அவரே முடித்து வைத்தார் .

கடந்த வெள்ளிகிழமை பேராசிரியர் சி. சற்குணராசா மற்றும் பதிவாளர் மற்றும் சில பல்கலைக் கழக உயர் அதிகாரிகள் ஆகியோர் மேற்பார்வை செய்ய, இடித்து அழிக்கப்பட்ட மேற்படி முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நினைவுத் தூபிக்கு நேர்ந்த அவலத்திற்கு எதிராக கண்டனம் தெரிவித்து உலகெங்கும் இருந்தும் இலங்கையிலிருந்தும் பல எதிர்ப்புக்குரல்கள் எழுந்ததனால் இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

குறிப்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் மற்றும் மத பீடங்களின் அதிபர்கள் பௌத்த பிக்குகள் ஆகியோர் தமிழ்நாட்டில் உள்ள முதலமைச்சர், துணை முதலமைச்சர், சீமான், பழ நெடுமாறன் போன்ற அரசியல் தலைவர்கள் உட்பட பல குரல் எழுப்பியும் கண்டனங்களைத் தெரிவித்தும் நின்றதாலும், கனடா, அமெரிக்கா, போன்ற நாடுகளிலிருந்தும் எழுந்த எதிர்ப்புக்குரல்கள் காரணமாகவும் இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளதாவும் உணரப்படுகின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்திலிருந்து எமது செய்தியாளர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி இடித்தழிக்கப்பட்ட நிலையில் , மீண்டும் அதே இடத்தில் தூபியினை நிறுவும் நோக்குடன் துணைவேந்தர் பேராசிரியர் சி. சற்குணராசாவினால் அதற்கான அடிக்கல் நடப்பட்டது. யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி கடந்த வெள்ளிக்கிழமை 8ம் திகதி இரவு இடித்தழிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சனிக்கிழமை காலை முதல் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரத போராட்டங்களை முன்னெடுத்தனர். தமிழகம், வெளிநாடுகளின் பிரதிநி திகள் பலரும் தமது கண்டனங்களை வெளிப்படுத்தி வந்ததுடன், புலம்பெயர் நாடுகளில் உள்ளோரும் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.




இது இவ்வாறிருக்க, இன்றையதினம் திங்கட்கிழமை வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முஸ்லிம் தரப்புக்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் தமது பூரண ஆதரவை தெரிவித்துள்ளனர். இந்நிலையில் யாழ். பல்கலைக்கழக முன்றலில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களை இன்றைய தினம் திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் பல்கலை கழக துணைவேந்தர் நேரில் சந்தித்து, மீண்டும் அதே இடத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியைக் கட்டுவதற்கு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாக உறுதியளித்தார்.

அதன் பிரகாரம் காலை 7.00 மணியளவில் மாணவர்களுடன் பல்கலைக்கழத்தினுள் செல்ல முற்பட்ட போது பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினர் தடுத்து நிறுத்தினார்கள். அதனையும் மீறி துணைவேந்தர் மாணவர்களை அழைத்துக்கொண்டு வளாகத்தினுள் சென்று, பரமேஸ்வரன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார். அதனை தொடர்ந்து நினைவு தூபி இடித்தழிக்கப்பட்ட இடத்திற்கு மாணவர்களுடன் துணைவேந்தர் சென்ற போது அங்கு வந்திருந்த கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தடுத்து நிறுத்தினார். அதன் போது துணைவேந்தர், நாம் தற்போது எந்த கட்டுமான பணிகளிலும் ஈடுபடவில்லை. தூபி இடித்தழிக்கப்பட்ட இடத்தில் அடிக்கல் நடப் போகிறோம். என்னுடைய மாணவர்கள் மூன்று நாட்களாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதனை முடித்து வைக்க வேண்டிய நிலையில் உள்ளேன். எம்மை தடுக்காதீர்கள் என மிகவும் கடுமையான கூறி நின்றார். எனவே .அதனை அடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி துணைவேந்தர் அவர்களையும் சில மாணவர்களையும் உள்ளே செல்வதற்கு அனுமதித்தனர். இதே நிலையில் இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை மீண்டும் அமைப்பதற்குரிய செலவை எற்பதற்கு திருகோணமலையிலுள்ள ஒரு அன்பர் முன்வந்துள்ளார் எனவும் அறியப்படுகின்றது.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு அஞ்சலியா?



யாழ்ப்பாண பல்கலைக் கழகம் நிறுவப்பட்ட காலம் தொடக்கம் அது உலகத் தமிழர்களின் அடையாளச் சின்னமாக விளங்குகின்றது. ஒரு உயர்ந்த சிகரத்தைப் போன்று அதனை நாம் கற்பனை செய்து பார்த்தால் அந்த சிகரத்தின் உச்சியில் நின்று உலகத்தைப் பார்ப்பது போன்றும் நாம் உணர்ந்து கொள்ளலாம். அதற்கு மேலாக கல்விச் சமூகக் கடலில் மிதந்து வரும் படகுகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஒரு கலங்கரை விளக்கு போன்றது என்றும் நாம் கற்பனை செய்து திருப்தியடையலாம். இவையெல்லாம் யதார்த்த்தோடு ஒட்டிக்கொண்டிருக்கும் நம்பிக்கைகளோடு, பிணைந்த உண்மைகள் என்றும் கூறலாம்.

இவ்வாறன கம்பீரமான அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தற்போது எல்லாப் பக்கங்களிலும் உதையும் அடியும் வாங்கும் ஒரு பந்தை போன்று சுழன்று கொண்டிருக்கின்றது. அறிவியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் தரரீதியாகவும் பல வெற்றிகளை ஈட்டிய எமது பல்கலைக் கழகம் தொடர்ச்சியாக இவ்வாறு உதையும் அடியும் வாங்குவதற்குக் காரணம், அது ஒரு தமிழர் மண்ணுக்குரிய கல்விச் சாலை விளங்குவதே ஆகும்.

தமிழ் மண்ணில் நிமிர்ந்து நிற்கும் இந்த கல்விச்சாலையை எமக்கு ஆலமரமாகவும் நாம் கொள்ளலாம். இலங்கையின் எந்தப் பாகத்திலிருந்து இருந்து வந்து இங்கு கற்பதன் மூலம், பலதுறைகள் சார்ந்த வெற்றியாளர்களாகவும் நிபுணர்களாவும் வெளியே பூமியின் மேற்பரப்பரப்பெங்கும் தகைசாரந்தவர்களாக நாற்காலிகளில் அமர்ந்திருக்கும் இலட்சக் கணக்கான எம்மவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தமது கலங்கரை விளக்கின் மீதே பார்வையைச் செலுத்தியவர்களாக உள்ளார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகம் எத்தனையோ பட்டமளிப்பு விழாக்களைக் கண்டது. ஆயிரக்கணக்கான கலை இலக்கிய நாடக அரங்குகளைக் கண்டது அங்கிருக்கும கைலாசபதி அரங்கம். யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பல மண்டபங்களும் விசாலமான விளையாட்டு மைதானமும் பல வெற்றிவிழாக்களையும், அரசறிவியல் கருத்தரங்குகளையும் கண்டவை. அறிவின் சுவாலைகளும் மொழி உணர்வுப் பிளம்புகளும் அங்கு ஒள□ர்ந்த வண்ணமே காணப்படும் .அங்குள்ள அனைத்து பீடங்களின் கல்வித் தரம் என்பது மிகவும் உயர்ந்தது.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை அடிப்பதும் உதைப்பதுமாக ஆட்சி பீடம் அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றது. தெருவில் முட்டாய் விற்கும் சிறுவர்களைப் போல அந்த பல்கலைக் கழக மாணவர்கள் ஆயுதப்படையினராலும், அரச அதிகார பீடத்தில் உள்ளவர்களாலும், சில வேளைகளில் அங்குள்ள தன்னலம் கருதிய பேராசிரியர்களினாலும் நடத்தப்படுகின்றார்கள். அங்கிருக்கும் பரமேஸ்வரன் ஆலயத்தை ஒரு திருக்கோவில் என்று அவர்கள் பார்ப்பதில்லை. அங்கிருக்கும் சிலைகளை கற்களாக மட்டுமே பார்க்கின்றார்கள். இதைப்போன்றே அங்குள்ள சில நினைவுத் தூபிகளையும் அவர்கள் பார்த்திருக்கவேண்டும்.

இவ்வாறான பார்வைகளின் வெளிப்பாடே கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மிகவும் மூர்க்கத் தனமான முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி மீதான தகர்ப்பு நடவடிக்கை. இரவோடிரவாக அந்த உயிருள்ள கற்களை கதறக் கதற இடித்து தகர்த்தார்கள் அரசின் ஏவலாளர்களான பல்கலைக் கழக நிர்வாகிகள். சில நிமிடங்களில் பல்கலைக் கழகத்திற்கு வெளியே பூட்டப்பட்டிருநத இருப்புக் கதவுகளுக்கு அப்பால் ஆக்ரோசத்துடன் கூடினார்கள், பல்கலைக் கழகத்தின் மாணவச் சமூகமும், அரசியல் செயற்பாட்டாளர்களும், பொது மக்களும்.

2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் என்னும் சிவந்த மண்ணில் இரத்தம் தோய்ந்த சதைகளாய் மடிந்த நூற்றுக்கணக்கான பல்கலைக் கழக மாணவர்கள், அவர்களது உறவினர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோரின் அநியாய இழப்பின் அடையாளமாக விளங்கிய அந்த நினைவுச் சின்னத்திற்கு 'அஞ்சலி செலுத்துவது போல வெளியே ஆவேசக் குரல்களும் "ஐயோ" "ஐயோ" என்ற அழுகை ஒலியும் வானப் பிளந்து சென்று தேவலோகம் வாழ் தெய்வங்களுக்கு கொடிய செய்தியைக் கொண்டு சென்றன.

அங்கு கூடி நின்ற மாணவச் செல்வங்கள் வீரத்தாய்மார் பெற்ற பிள்ளைகள் போன்று குமுறினார்கள். மகாத்மாக்கள் போன்று மன்றாடினார்கள். 'அந்நியன்' படத்தின் விக்ரம் போன்று மாறி மாறி கோபத்தையும் அவமானத்தையும் சோகத்தையும் வெளிப்படுத்தினார்கள். உணவை மறுத்து நோன்பிருந்து அந்த சோகங்களின் அடையாளக் குறிக்காக அஞ்சலி செலுத்தினார்கள். உலகெங்கும் உள்ள தமிழர் நெஞ்சங்கள் நொந்துபோனவையாக நொடிந்து போயிருக்கும் அந்த மண்ணில் நின்றவர்கள் தொடர்ந்து போராடினார்கள்.

எப்படிச் சாத்தியமானதோ? நாம் அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு 'இறங்கி; வந்த துணைவேந்தர் மாணவர்களோடு சேர்ந்து நின்று அவர்களின் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். அஞ்சலி செலுத்த வேண்டிய நினைவுத் தூபியை அழித்து நொருக்கிய அவரது கையாலேயே மீண்டும் அடிக்கல்லை நாட்டினார். திங்கட்கிழமை நாள் இவ்வாறு சற்று தெளிந்த நிலையில் இருளைத் தழுவியது.

ஆனால் நாளை என்ன நடக்கும் என்ற கேள்விகளோடு நாமும் உறங்கச் செல்வோம். நாளை ஒரு விடியல் இருக்கின்றதே என்ற நம்பிக்கைகள் எம்மை வரவேற்கட்டும். ஒரு நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தப்படுகின்றது !

# கனடாவின் ஒன்றாரியோ மாகணாப் பாராளுமன்றத்தின் ஆளுங்கட்சி உறுப்பினரான திரு. லோகன் கணபதியின் கண்டனச் செய்தி



கனடாவின் ஒன்றாரியோ மாகணாப் பாராளுமன்றத்தின் ஆளுங் கட்சி உறுப்பினரும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற வருமான திரு லோகன் கணபதி யாழ் பல்கலைக் கழகத்தில் அமைந்திருந்த 'முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி' தகர்க்கப்பட்டது தொடர்பாக வெளியிட்ட கண்டனச் செய்தி:

Sri Lankan authorities entered Jaffna University and demolished the Tamil Genocide Vanni-Mullivaikkal Monument.
I join my Tamil brothers and sisters in grief and horror at the news of yesterday's events.

The monument was built to commemorate the innocent Tamil lives who were massacred in 2009. During the final stages of the three-decade long Sri Lankan Civil War, the Sri Lankan state disobeyed a designated no fire zone, and killed tens of thousands of innocent Tamil people.

This destruction of the monument continues the denial of Tamil genocide by the Sri Lankan state - removing evidence of its history and erasing the memory of the innocent people who were unjustly murdered. It is another attack on the safety of Tamil people in Sri Lanka. The wounds of the Sri Lankan Civil War and the Vanni-Mullivaikkal massacre are still fresh in the hearts and minds of Tamil people all over the world. Collective grief follows us wherever we go because the state government of our motherland refuses to admit to its crimes of genocide and actively erases any memory of their wrongdoing.

The Tamil people will not forget the enforced disappearances and unspeakable acts of violence perpetrated by the Sri Lankan state during the Civil War. An entire generation of people has been scarred forever by these atrocious, inhumane crimes. As we try to heal, we must continue to fight for the memory of those we lost.

I strongly condemn the destruction of the Tamil Genocide Vanni-Mullivaikkal Monument. Also, I urge our Canadian government to intervene at this time.

Yours truly,
MPP, Logan Kanapathi
Markham-Thornhill


# இழிவான செயலை ஒன்றை செய்துவிட்டு அதற்கு மேலிடத்து உத்தரவு என்று காரணம் கூற முடியாது

## நினைவுதூபி இடித்தழிப்புக் குறித்து விக்கி காட்டம்

தமிழ் மக்களின் உணர்வுகளின் வெளிப் பாடாக அவர்களுடைய அன்புக்குறிய உறவுகளை நினைவு கூறுவதற்காக யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டது தான் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி.

“இராணுவப் பாதுகாப்புடன் இதனை நிர்மூலமாக்குவது தமிழ் மக்களின்.உணர்வுகளை நசுக்குவதற்கு ஒப்பானது. அதேவேளை. இந்த நினைவுத்தூபி இடிப்பு விடயத்தில் பல்கலைக்கழக நிர்வாகம் நடந்து கொண்ட முறைமை குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒரு இழிவான செயலை செய்துவிட்டு அதனை மேலிடத்து உத்தரவு என்று காரணம் கூற முடியாது. இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக்கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான ‘சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் தற்போது உருவாகியிருக்கும் நிலைமைகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது: இப்போது இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி, யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றி முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள். பல்கலைக்கழக சமூகத்தினர் மற்றும் அவர்களின் உறவுகளுக்காக அமைக்கப்பட்டது. மாணவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் என அனைத்துத்தரப்பினரும், இணைந்தே இதனை அமைத்தார்கள். இதனை நிர்மூலமாக்க வேண்டும் என்ற அரசின் உயர் தரப்பினரின் அழுத்தங் களையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம், இராணுவப் பாதுகாப்புடன் இதனை அகற்றியிருக்கின்றது.



கடந்த காலங்களில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், அவர்கள் மீதான படுகொலைகள் போன்றவற்றின் நினைவுகளை முழுமையாக அகற்றிவிட வேண்டும் என்பது தற்போதைய அரசின் நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றது. அதன் ஓர் அங்கமாகத் தான் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

அரசு முன்னெடுக்கும் மிகவும் ஆபத்தான வேலைத்திட்டங்களில் இதுவும். ஒன்று. இது போன்ற பல திட்டங்கள் இந்த அரசிடம் இருக்கின்றன எனத் தெரிகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள். விரிவுரையாளர்கள் தமது உணர்வுகளின் வெளிப்பாடாக தமது அன்புக்குரிய உறவிற்காக அமைத்த நினைவுத் தூபியை ஒரே இரவில் அராஜகமாகத் தகர்த்தெறிவது என்பது தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டி நசுக்குவதற்கு ஒப்பானது. ‘இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் ஒருபோதும் நல்லெண்ணத்தை ஏற்படுத்திவிட முடியாது. இது இராணுவ ஒடுக்குமுறையின் கோரத்தின் வெளிப்பாடாகத்தான் இருக்கின்றது. அத்துடன் எம்மவரின் பயத்தின் உச்சகட்டமாகவும் காணப்படுகின்றது.

பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியில் இராணுவம். அதிரப்படையிரைக் குவித்து துப்பாக்கி முனையில் மாணவர்களையும். பொதுமக்களையும் அச்சுறுத்திப் பணியவைப்பதானது இராணுவ அடக்குமுறையின் அசிங்க முகத்தையே வெளிப் படுத்துகின்றது. இந்தப் பகுதியில் இராணுவத்தைக் குவிக்க வேண்டிய அவசியம் எதுவும் ‘இல்லை. உடனடியாக இராணுவம் அங்கிருந்து திரும்பப் பெறப்பட வேண்டும்.

‘இப்போது இங்கு நடப்பது வெகுவிரைவில் சிங்களப் பகுதிகளிலும் ஏதோ ஒரு விதத்தில் நடைபெறப் போகின்றது என்பதை எமது சிங்கள சகோதர, சகோதரிகள் உணர்வார்களாக அதேவேளை, இந்த நினைவுத் தூபி இடிப்பு விடயத்தில் பல்கலைக் கழக நிர்வாகம் நடந்து கொண்ட முறைமை குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒரு இழிவான செயலை செய்துவிட்டு அதனை மேலிடத்து உத்தரவு என்று காரணம் கூறமுடியாது. ஒரு தவறான காரியத்தை செய்யுமாறு மேலிடுத்து உத்தரவு வருமானால், அதனை செய்வதில் உள்ள பிழை அல்லது அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகியவற்றை மேலிடத்துக்கு எடுத்துக் கூறி புரிய வைப்பது சம்பந்தப்பட்டவர்களின் கடமை. இது இந்த விடயத்தில் எந்தளவுக்கு நடைபெற்றிருக்கிறது என்பது எனக்கு தெரியாது.

எது எப்படி இருந்தாலும், இதுவரை காலமும் இந்த நினைவுத் தூபியை அகற்றுவதற்கு பல்கலைக்கழகத்தின் முன்னைய இரண்டு நிர்வாகங்களும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்றுள்ளது.

# யாழ். பல்கலை வளாக தமிழர் நினைவுத்தூணை அழித்த இலங்கை அரசை கண்டிக்கின்றார் கனடா விஜேய் தணிகாசலம். எம்பிபி



சிறிலங்கா அரசினால் 2009ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைக்கப்பட்டிருந்த முள்ளி வாய்க்கால் தமிழின அழிப்பு நினைவுத் தூபி சிறிலங்கா அரச படைகளாலும் அதன் அதிகாரிகளாலும் தகர்த்தழிக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவுத் தூபியானது, பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் போது கொல்லப்பட்ட தமது அன்புக்குரியவர்களை நினைவுகூரும் இடமாக விளங்கியது. தமிழின அழிப்பு நினைவுச் சின்னத்தினை அழிப்பதென்பது முள்ளிவாய்க்காலில் சிறிலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நினைவுச் சுவடுகளை இல்லாதொழிப்பதுடன், சிறிலங்கா அரசின் அனைத்துத் தவறுகளையும் மூடிமறைப்பதற்கான நடவடிக்கையாகும்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த வர்த்தகரும் ஸ்காபரோ றூஜ் பார்க் வாசியுமான கார்த்திக் நந்தகுமார் அவர்கள், நடைபெற்றுள்ள இன்றைய நிகழ்வு தனக்கு யாழ்ப்பாண நூலக எரிப்பு சம்பவத்தினை நினைவுபடுத்தியதெனத் தெரிவித்துடன், அரிய பல நூல்களையும் தமிழரின் வரலாற்றுச் சான்றுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கிய யாழ்ப்பாணப் பொது நூலகம் 1981ஆம் ஆண்டு மே 31ஆம் திகதியன்று சிறிலங்கா அரசினால் தீயிட்டு அழிக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டார்.

நினைவுச் சின்னங்கள், சிலைகள், தூபிகள் போன்றவை இறந்தவர்களை நினைவுகூரும் விதத்தில் மக்களால் நிறுவப்படுள்ளவை. இவற்றினை அழித்தி செயலானது இறந்தவர்களை நினைவுகூர விடாது தடுத்திருப்பதுடன், தமிழ் மக்களுக்கு மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் அளித்திருக்கிறது.

நடைபெற்றவைகளின் நினைவுகளைச் சிதைப்பது, தவறுகளை மூடிமறைப்பது, சாட்சிகளை அழிப்பது போன்றவை இன அழிப்பின் இறுதிக் கட்டமாகக் கருதப்படுபவை. மிர்கோ கேர்மிக் என்பவரால் குறிப்பிடுவது போல், வல்லாதிக்கங்கள் தமது வரலாற்றின் இருண்ட பக்கங்களை அகற்றி தமக்கு வேண்டியவாறு வரலாற்றினை மாற்றி எழுதுகின்றன. இவற்றுக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் நடைபெற்றவற்றை எடுத்துரைக்கும் நினைவுச் சின்னங்கள், நினைவு நிகழ்வுகள் அழிக்கப்படுகின்றன அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றன. இதன் அடிப்படையில்தான் சிறிலங்கா அரசினால் நடத்தப்பட்ட அட்டூழியங்களின் சான்றாக விளங்கிய இந்த நினைவுச் சின்னமும் அழித்தொழிக்கப்பட்டுள்ளது.

ஸ்காபரோ றூஜ் பார்க்கில் வசிக்கும் இன்னொருவரான சுகாதாரத் துறையில் பணிபுரியும் திவ்வியா சாந்தக்குமார் கருத்துத் தெரிவிக்கும்போது, சிறிலங்கா அரசாங்கம் தமிழர்களின் வடகிழக்கு பகுதிகளை படையினரின் ஆதிக்கத்தினுள் தொடர்ந்தும் வைத்திருப்பதுடன் தமிழர்கள் கொல்லப்பட்ட தமது அன்புக்குரியவர்களை நினைவு கூருவதற்கும், அவர்களின் நினைவுச் சின்னங்களைப் பேணுவதற்கும் தடைபோட்டு வருகின்றது என்றார்.

சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் தமிழர்கள் மீதான தனது இன அழிப்பை மறுத்து வருகின்றது. இச்செயலானது தமிழர்கள் தமக்கு நடைபெற்ற அழிவின் நினைவுகளிலிருந்து மீண்டு தமக்கான புதியதொரு வாழ்க்கையை தொடங்க விடாது தடுக்கின்றது. எனவேதான், 104வது சட்டமூலம் மிக மிக அவசியமானதாகும். இந்தச் சட்டமூலம் ஒன்ராறியோவில் உள்ள தமிழ் மக்களுக்கு இன அழிப்பினால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்பினைக் குறைக்க உதவும். இந்நேரத்தில், எமது கனடிய அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன். **விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர் ஸ்காபரோ றூஜ் பார்க்**

### நினைவுதூபி இடிப்பிற்கும் எமக்கும் தொடர்பு இல்லை! இராணுவ தளபதி தெரிவிப்பு

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு தூபி இடிக்கப் பட்டமைக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. இவ்வாறு ராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது: நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை, யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் தீர்மானமாகும். அந்த விடயத்துக்கும் இராணுவத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

எந்தவொரு சந்தர்ப்பத்தினும் இராணுவம் இந்த விடயத்தில் தலையிடமாட்டாது. பல்கலைக் கழகத்துக்குள் அமைதியின்மை ஏற்பட்டு, அதைப் பொலிஸாரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத பட்சத்தில் மாத்திரமே இராணுவம் களமிறங்கும் என்றார்.

### நினைவுத்தூபி இடிக்கப்பட்டமைக்கு மோடி கண்டனம் வெளியிட திமுக தலைவர் ஸ்டாலின் வலியுறுத்து

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியும் இடிக்கப் பட்டமைக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்திட வேண்டும். இது உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு. இவ்வாறு தி.மு.க தலைவர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக தனது டுவுட்டரில், ஈழத்தமிழர்களின் பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியும் இடிக்கப் பட்டமைக்கு எனது கடும் கண்டனங்கள்! இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த அதிர்ச்சி சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்திட வேண்டும். இது உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு என பதிவிட்டுள்ளார்.

# முள்ளிவாய்க்கால் தூபி இடித்தழிப்பு இலங்கை அரசின் மாபாதகச் செயல் :

## துணைபோன துணைவேந்தருக்கும் கண்டனம் தமிழக முதலமைச்சர் எடப்பாடி 'டிவிட்டர்' பதிவு



யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இரவோடு இரவாக ஒழிக்கப்பட்டுள்ள செய்தி உலகத் தமிழர்களைப் பெரும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது. இலங்கை அரசின் இந்த மாபாதகச் செயலுக்கும் அதற்குத் துணைபோன யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கும் எனது கடும் கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள கண்டனத்தில் தெரிவித்துள்ளார். இறுதிப்போரில் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட தமிழ் உறவுகள் நினைவாக யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி நேற்றிரவு இடித்துத் தகர்க்கப்பட்டது. இந்தச் சம்பவத்துக்குத் தமிழகத் தலைவர்களும் தங்களது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்,

இந்தநிலையில், முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிப்புக்கு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மற்றும் துணை முதலமைச்சர் ஓ.பன்னாிசெல்வம் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தனது ருவிட்டரில், இலங்கை, முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்டப் போரில் இரக்கமின்றி கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நினைவாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபி இரவோடு இரவாக இடிக்கப்பட்டுள்ள செய்தி பேரதிர்ச்சி அளிக்கின்றது.

உலகத்தமிழர்களைப் பெரும் வேதனையில் ஆழ்த்தியுள்ள இலங்கை அரசின் இந்த மாபாதக செயலுக்கும் அதற்குத் துணைபோன யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் எனது கடம் கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று பதிவிட்டுள்ளார். இதேபோல், தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தனது

**"இலங்கைப் போரில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக யாழ்ப்பாணம் பல்கலையில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி இரவோடிரவாக இடித்துத் தகர்க்கப்பட்டுள்ளமை மிகுந்த அதிர்ச்சி அளிக்கின்றது" தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம்**

ருவிட்டரில் இலங்கைப் போரில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக யாழ்ப்பாணம் பல்கலையில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி இரவோடிரவாக இடித்துத் தகர்க்கப் பட்டுள்ளமை மிகுந்த அதிர்ச்சி அளிக்கின்றது.

ஈழப்போரில் ஈவு இகரக்கமின்றி கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கப் போராடிக் கொண்டிருக்கின்ற வேளையில், தமிழர் களின் உணர்வை மேலும் ரணப்படுத்தும், இனவெறியினரின் இந்த இழிசெயல் கடும் கண்டனத்துக்குரியது. ஏற்றுக்கொள்ள முடியாத இந்தக் கொடுஞ்செயலை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

# இலங்கை அரசின் பேரினவாத செயலைக் கண்டிக்கிறது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி



இலங்கையில் உள்ள யாழ்பாண பல்கலைக் கழக வளாகத்தில் தமிழர்கள் முயற்சியில் எழுப்பப் பட்டிருந்த முள்ளிவாய்க்கால் - நினைவு முற்றத்தை சிங்களப் பேரினவாத அரசின் இராணுவம் இரவு நேரத்தில் கோழைத்தனமாக தகர்த்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இலங்கையின் விடுதலைப் போராட்டத்திலும், சமூக, பொருளாதார, பண்பாட்டு வரலாற்றிலும் தமிழர்கள் நிராகரிக்க முடியாத பங்களிப்பு ஊடும், பாவுமாக பிணைந்து வருகிறது. இதில் தமிழர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டதால் முரண்பாடுகளும், மோதல்களும் தொடர்கின்றன. இறையாண்மை கொண்ட தேசத்தில் அனைத்து உரிமைகளையும் பெற்று கண்ணியமாக வாழும் உரிமைக்காக போராடி வரும் தமிழர்களின் கோரிக்கைகள் மீது அரசியல் ரீதியான தீர்வுகாணும் வரை போராட்ட வேட்கை தணியாது என்பதை பேரினவாத அரசு உணர வேண்டும்.

யாழ்பாண பல்கலைக் கழகத்தில் இலங்கை ராணுவம் மேற்கொண்டிருக்கும் இழி செயலுக்கு இந்திய அரசு கண்டனம் தெரிவித்து, இடிக்கப்பட்ட நினைவு முற்றத்தை உடனடியாக இலங்கை அரசு கட்டியமைக்க வலியுறுத்த வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு மத்திய அரசை கேட்டுக் கொள்கிறது. என இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநில செயலாளர் முத்தரசன் கூறியுள்ளார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவிடம் இடித்துத் தகர்க்கப்பட்டது பேரதிர்ச்சி சீமான் கண்டனம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை இடித்துத் தகர்ப்பதா? சீமான் கடும் கண்டனம் |

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, ஈழப்பேரழிவைச் சந்தித்து ஆறா ரணத்தையும், கொடும் பேரிழப்பையும் சந்தித்து நிற்கும் தமிழர்களைச் சீண்டும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவிடம் இரவோடு இரவாக இடித்துத் தகர்க்கப்பட்டுள்ளது பேரதிர்ச்சி அளிக்கிறது.

இனப் படுகொலை செய்த ஆட்சியாளர்களின் தொடர் இன அழிப்பின் நடவடிக்கையாகத்தான் இதைக் கருதவேண்டியிருக்கிறது. முள்ளிவாய்க்கால் நிலத்தில் போர் மௌனிக்கப்பட்டதைக் குறிக்கும் வகையில் கட்டியெழுப்பப்பட்ட நினைவிடத்தை இடித்திருப்பது உலகம் முழுவதும் வாழும் தமிழர்களிடம் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியிருக்கிறது.

ஈழத்தில் இரண்டு இலட்சம் தமிழர்களைக் கொன்றுமுடித்து, அந்தப் இழப்புக்கு நீண்டகாலமாய் நீதிகேட்டு உலகத்தமிழர்கள் உள்ளம் குமுறிக் கொண்டிருக்கையில், வெந்தப் புண்ணில் வேலைப்பாய்ச்சுவது போலச் சிங்களப் பேரினவாதத்தால் நிகழ்த்தப்பட்டிருக்கும் இக்கோரச் சம்பவம் ஏற்றுக்கொள்ளவே முடியாத வன்மையான கண்டனத்திற்குரியது. ஒரு இனத்தைப் பேரழிவுக்குள் தள்ளி, இரண்டு இலட்சம் தமிழர்களைத் துள்ள துடிக்கப் படுகொலை செய்து, தமிழர்களின் வீட்டையும், நாட்டையும் அழித்து, நிலங்களை அபகரித்து, தமிழ்ப்பெண்களைச் சூறையாடி, தமிழர்களை அடையாளமற்று அழித்து முடித்து, மொத்த நாட்டையும் தங்களுடையதாக மாற்றிக் கொண்டுவிட்ட பிறகும், தமிழர்கள் மீதான வன்மமும், ஆத்திரமும் துளியளவும் சிங்களப் பேரினவாதிகளுக்குக் குறையவில்லை என்பதையே இது காட்டுகிறது. போர் முடிந்து, அங்கு அமைதி திரும்பிவிட்டது என்றுரைத்தவர்கள் இத்தகைய அடையாள அழிப்புக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? அன்றைக்கு யாழ் நூலகம் எரிக்கப்பட்டது;

இன்றைக்கு யாழ் பல்கலைக் கழகத்திலுள்ள நினைவு மண்டபம் அழிக்கப்பட்டிருக்கிறது. இது தமிழர்கள் மீதான இனப்படுகொலையின் தொடர்ச்சியே. ஒற்றை இலங்கைக்குள் சிங்களர்களோடு இணைந்து தமிழர்கள் வாழ்கிறவரை, சிங்கள ஆட்சியாளர்களுக்குக் கீழ் இருக்கிற வரை எத்தனை ஆட்சி மாறினாலும் தமிழர்களுக்கு இதுதான் நிலை என்பதை இச்சம்பவத்தின் வாயிலாக உலகத்தார் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழர்கள் தங்கள் பண்டிகையைக் கொண்டாடும் மாதமான தை மாதத்தில் இனப்படுகொலையாளன் ராஜபக்சே அரசு தமிழர்களுக்குப் பொங்கல் பரிசாக இந்த இடிப்பை நிகழ்த்தியிருக்கிறது.எங்கள் மொழியைச் சிதைக்கலாம்; இனத்தை அழிக்கலாம். உரிமைகளைப் பறிக்கலாம். நிலங்களை ஆக்கிரமிக்கலாம்.

அடக்குமுறையை ஏவலாம். ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடலாம். பயங்கர வாதிகளெனப் பழிசுமத்தலாம். ஆனால், எங்கள் விடுதலை உணர்வுகளை எந்த வல்லாதிக் கத்தாலும், பேரினவாதத்தாலும் விளங்கிட முடியாது. அடக்கி ஒடுக்க முற்படுகிறபோதெல்லாம் சினம்கொண்டு திமிறி எழும் பேருணர்ச்சியைக் கொண்டு தமிழ்த்தேசிய இன மக்கள் நாங்கள் மீண்டெழுவோம். இந்திய வல்லாதிக்கமும், பன்னாட்டுச் சமூகமும் எங்களை வஞ்சிக்கலாம். துரோகம் விளைவிக்கலாம். ஒருநாள் இந்நிலை மாறும். களமும், காலமும் எங்கள் கைகள் வரப்பெறும். அன்றைக்கு எங்கள் நாட்டை நாங்கள் மீளப்பெறுவோம்.

அறம் தோற்றால் மறம் பிறக்கும்; மறம் தோற்றால் மீண்டும் அறமே தழைக்கும் எனும் இயற்கை நியதிகளுக்கேற்ப, அறவழியில் எங்களது தாயக விடுதலைக்காகவும், எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும் உலகரங்கில் குரலெழுப்பிக் கொண்டிருக்கிறோம். ஒருநாள் நாங்கள் அதிகார அடுக்குகளை அடைவோம். இனவழிப்புக்கு உள்ளாகி நிர்கதியற்று நிற்கிற வேளையில், கட்டிவைத்த நினைவிடம் கூடச் சிங்கள அரசாங்கத்தை நிம்மதியாய் உறங்கவிடவில்லை. இன்றைக்கு எதை எண்ணி அச்சப்பட்டு ஈழத்தமிழ் மக்களை அச்சுறுத்தி அம்மண்ணில் இருந்த ஒற்றை நினைவிடத்தையும் சிங்களப் பேரினவாதம் அழித்து முடித்ததோ, ஒருநாள் அதே மண்ணைத் தமிழர்கள் நாங்கள் ஆளுகை செய்வோம். எங்கள் தாயகத்தை மீள்கட்டுமானம் செய்வோம். அன்றைக்கு எங்களது வெற்றிச்சின்னத்தை இதே யாழ் பல்கலைக்கழகத்தில் கட்டியெழுப்புவோம். எங்கள் நாடும், எங்கள் மண்ணும் கைவரப்பெறும் நாள் வரை ஓயோம்!

# யாழ். பல்கலைக்கழக நினைவுத் தூவி இடிப்பு – சுரோன் ராகவனுக்கு தொடர்பா?



தமிழர்கள் தனித்தவமாக தமது அடையாளங்களுடன் இலங்கையில் வாழ முடியாது என்பதற்கு மிகப்பெரிய ஒரு உதாரணமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களினால் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் உடைக்கப்பட்ட சம்பவம் அமைந்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். இவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களினால் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் அரசாங்கத்தின் கட்டளைக்கு அமைவாக இராணுவத்தின் உதவியுடன் பல்கலைக்கழக துனைவேந்தரின் ஆலோசனைக்கு அமைவாக வெள்ளிக்கிழமை இரவு இடிக்கப்பட்டுள்ளது.

அரச திணைக்கலமாக இருக்கலாம்,அரச நிறுவனங்களின் பணிப்பாளர்களாக இருக்கலாம் இவர்கள் எல்லாம் அரசாங்கத்தின் ஒரு ஏஜேன்டுகலாக இருக்கின்றனர்.

வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்ற நிகழ்வு என்பது ஒட்டு மொத்த தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்திய நிகழ்வாக இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

தமிழர்கள் தனித்தவமாக தமது அடையாளங்களுடன் இலங்கையில் வாழ முடியாது என்பதற்கு மிகப்பெரிய ஒரு உதாரணமாக குறித்த சம்பவத்தை பார்க்க முடியும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது இலங்கையில் தமிழர்கள் மிகக் கொடூரமான முறையில் இனப் படுகொலையால் 2009 ஆம் ஆண்டு இடம் பெற்ற யுத்தத்தில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள்,பொது மக்கள் ஆகியோரை நினைவு கூறுவதற்கான ஒரு நினைவிடத்தையே இலங்கை அரசு இடித்துள்ளது.

உண்மையில் இதன் பிண்ணனியில் பல்வேறு விடையங்கள் உள்ளதாக நான் சந்தேகப்படுகின்றேன். என்னிடம் சிலர் ஆலோசனைகளையும் வழங்கி உள்ளனர்.

குறிப்பாக கடந்த பாராளுமன்றத்தில் முன்னாள் வடக்கு ஆளுனரும், பாராளுமன்ற உறுப்பினலுமான சுரேன் ராகவன் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஒட்டோபா சட்ட சபையில் ஒரு சட்டமாக முன் மொழிவதற்கு விவீஜ தனியாசனம் என்பவர் முன் மொழிந்துள்ளார்.

அதனை நிறை வேற்றக்கூடாது என்ற கருத்தை முன் வைத்தார்.என்னைப் பொருத்த வகையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நினைவிடம் உடைக்கப் பட்டமைக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் பேசியதற்கும் இடையில் நேரடி தொடர்புகள் உள்ளதாகவே நான் கருதுகின்றேன்.

அவர் பேசிய ஒரு வார காலத்தினுள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களினால் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் உடைக்கப்பட்டுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

# நினைவுத்தூபியை அழிப்பதால் தமிழின உணர்வை அழித்துவிடலாம் எனக் கனவு காணும் சிங்களம்

தமிழின அடையாளங்களை அழிக்கும் சிங்கள அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை தான் இரவோடு இரவாகச் சத்தம் சந்தடி இல்லாமல் யாழ் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் நிர்மூலமாக்கப்பட்டது. பல்கலைக்கழகத்திற்குள் பொங்குதமிழ் தூபி, மாவீரர் தூபி, முள்ளிவாய்க்கால் தூபி என மூன்று நினைவுத்தூபிகள் உள்ளன.

சிங்களத்தின் அடிவருடிபான துணைவேந்தருக்கு பதவிவழங்கிய போது முன்வைக்கப்பட்ட நிபந்தனையின் வெளிப்பாடே முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிப்பு. இன்று விலைபோகும் ஒருசில தமிழர்களை வைத்தே தமிழின அழிப்பைக் கச்சிதமாகச் செய்யும் சிங்கள அரசை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பொங்குதமிழின் பிறப்பிடமான யாழ் பல்கலைக்கழகம் தமிழ் உணர்வுள்ள பல தலைமுறைகளை அறுவடை செய்த நாற்றுமேடையாகும். அடுத்த தமிழ்த்தலைமுறைகள் தமிழ் உணர்வாளர்களாகத் துளிர்விடக் கூடாது என்பதில் சிங்களம் மிகவும் கவனமாகச் செயற்படுகின்றது.

கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக்கட்டமைப்பை தாங்கி நிற்கும் தூண்கள். இந்தத் தூண்களைத் தகர்த்துவிட எதிரி முனைகிறான். இனத்தனித்துவத்தை அழிப்பது அவனது நோக்கம். – தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் – வடக்குக் கிழக்கில் தமிழர்களின் அடையாளங்களை அழித்து தனது கலாச்சார எச்சங்களாக மாற்றிவரும் இனவாத சிங்கள அரசு இலங்கைத் தீவில் தமிழர்களின் அடையாளங்களே இருக்கக்கூடாது என்ற வன்மமான சிந்தனையுடன் காய் நகர்த்தி வருகின்றது. தூபிகளையும் நினைவுச்சின்னங்களையும் அழிப்பதால் தமிழரின் விடுதலை வேட்கையையும் தமிழ் உணர்வையும் இல்லாது ஒழித்துவிடலாம் என்று கனவு காணும் சிங்களத்தின் கொட்டத்தை அடக்க மக்கள் புரட்சி வெடிக்கட்டும் பார்த்தீபன் கனவு பலிக்கட்டும்.

**தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம், அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை**

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூணை இடித்ததிற்கு சரத்குமார் கடும் கண்டனம்

இலங்கை உள்நாட்டுபோரின் போது இரக்கமின்றி கொல்லப்பட்ட அப்பாவி தமிழின மக்களின் நினைவாக யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் 2019 – இல் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூண் இரவோடு இரவாக நேற்று தகர்க்கப்பட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது. இலங்கை போர் வடுவையும், தமிழர் அடையாளத்தையும் புள்டோசர் கொண்டு இலங்கை அரசு அழிக்க முடியாது. உலக அளவில் அமைதியை விரும்பி நாடுகள் ஒற்றுமையாக கைகோர்க்கும் சமயத்தில், இலங்கையில் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் இலங்கை அரசின் செயல் கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்கள் கைது, இருநாட்டு உறவு தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கையில் 3 நாட்கள் பயணம் மேற்கொண்ட நிலையிலும், இருநாட்டு அமைதி உறவை மீறிய இலங்கை அரசின் அத்துமீறலுக்கு மத்திய அரசு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும். தமிழரின் நெஞ்சுரம், வலிமை, உரிமை, உணர்வு, அடையாளம், இன ஒற்றுமை, அண்டை நாட்டு உறவு, உலக அமைதியை மனதில் கொண்டு செய்த தவறை திருத்துங்கள். இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சிங்கள வெறியர்களின் ஆணவப்போக்கை வன்மையாகக் கண்டிக்கிறார் தொல்.திருமாவளன்



முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூரும் விதமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்ட நினைவுத்தூண் சிங்கள அரசால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு இருக்கிறது. சிங்கள அரசின் இந்த இனவெறித் தாக்குதலை ஆணவப்போக்கை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குள் அந்த நினைவுத் தூணை மீண்டும் நிறுவ வேண்டுமென சிங்கள அரசை வலியுறுத்துகிறோம்.

தமிழர்களின் விடுதலைப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் முள்ளிவாய்க் காலில் சிங்கள ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர். இந்த இனப்படு கொலையை உலகமே கண்டித்தது. ஐநா பொது மன்றம் அதற்காக விசாரணை ஆணையம் ஒன்றை அமைத்துள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மாணவர்களை நினைவுகூர்ந்திடும் விதமாக நினைவுத்தூண் ஒன்றைப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் நிறுவினார்கள்.

யாருக்கும் இடையூறு இல்லாமல் ஒதுக்குப்புறமாகவே அந்த நினைவுத் தூண் நிறுவப்பட்டது. இனவெறி அரசின் வலியுறுத்தலால் அந்த நினைவுத் தூணை அகற்ற வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழு கூறியது. அதற்கு மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். நேற்று இரவோடு இரவாக ராணுவத்தையும் காவல்துறையையும் பயன்படுத்தி அந்த நினைவுத் தூணை சிங்களப் பேரினவாத அரசு இடித்துத் தரைமட்டமாக்கி இருக்கிறது. இனப் படுகொலைகளுக்கு நீதி வழங்காதது மட்டுமின்றி அதை நினைவுகூர்வதற்கும் கூட அனுமதிக்க மாட்டோம் என்று சிங்கள பேரினவாத அரசு கொக்கரிக்கிறது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு ஓரிரு நாட்களில் இந்த சம்பவம் நடந்திருப்பது, இந்தியாவை இலங்கை அரசு பொருட்படுத்தவே இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. சீன அரசின் கூட்டாளியாக மாறி இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உருவெடுத்திருக்கும் இலங்கை அரசை இந்தியா இப்போதும் நட்பு சக்தியாகக் கருதுவதும் ஈழத்தமிழர் நலனை முற்றாகப் புறக்கணிப்பதும் சரியான அணுகுமுறை அல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடிக்கப்பட்ட நினைவுத் தூணை மீண்டும் நிறுவ வேண்டும் என சிங்கள அரசை வலியுறுத்துகிறோம். இவ்வாறு விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# துணைவேந்தரின் பணி துரோகம் செய்வதல்ல!




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு என்று ஒரு தனித்துவமும் வரலாறும் இருக்கிறது. அதற்காக பல மாணவர்களும் பேராசிரியர்களும் பல தியாகங்களை செய்திருக்கிறார்கள். குறிப்பாக தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் ஜனநாயக அறிவுத் தளமாக யாழ் பல்கலைக்கழகம் பெரும் பங்களிப்பை செய்திருக்கிறது. பொங்கு தமிழ் என்ற உயரிய போராட்டத்தின் வழியாக ஈழ விடுதலைக்கு பலம் சேர்த்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இன்றைய நிலை என்பது பெரும் சோகத்தையும் அழுத்தத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த எட்டாம் திகதி இரவு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இரவோடு இரவாக திருட்டுத்தனமாக அழிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக வாசலில் சிங்கள அதிரடிப்படையினர் குவிக்கப்பட்ட நிலையில் மாணவர்களை உள்ளே அனுமதிக்காது நினைவுத் தூபியை ஜேசிபி கொண்டு அழிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசும் அதன் படைகளும்தான் நினைவுத் தூபியை அழித்துள்ளதாக மாணவர்கள் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆனால் ஸ்ரீலங்கா இராணுவத்தளபதி சவேந்திர சில்வா, முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அழிப்புக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று சொல்லியுள்ளார். அத்துடன் நினைவுத் தூபியை அழிக்கும் தீர்மானத்தை எடுத்தது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் என்று இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியிருக்கிறார். சிங்கள மாணவர்கள் அங்கு கல்வி கற்பதற்காக இந்த முடிவை சற்குணராஜா எடுத்திருப்பதாக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சொல்ல வைக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்கள் சுயாதீனத் தன்மை கொண்டவை. அப்படியான பல்கலைக் கழகங்களால்தான் நாட்டுக்குரிய சிறந்த பட்டதாரிகளை உருவாக்க முடியும். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சற்குணராஜா தனது அற்ப பதவிக்காக மாபெரும் துரோகத்தைப் புரிந்துள்ளார். உண்மையில் தமிழர்களுக்கு எதிராக சிங்களத்திற்கு ஆதரவாக துரோகம் புரிவதைத்தான் தனது பணி என சற்குணராஜா கருதுகிறார் போலிருக்கிறது.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி என்பது போரில் கொல்லப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் அவர் தம் உறவினர்களின் நினைவாக அமைக்கப்பட்டது. அங்கே, மாணவர்கள் கண்ணீர் விட்டு வணங்கி தமது உள்ளத்தை ஆற்றுப்படுத்துகின்றனர். இது சற்குணராஜாவுக்கும் சிங்கள அரசுக்கும் எந்த வகையில் எதிரானது? அல்லது எந்த வகையில் இன நல்லிணக்கத்திற்கு எதிரானது? இந்த நினைவுத் தூபியை அழிப்பதன் மூலம் போரில் பல இலட்சம் மக்களை தாம் கொன்று இன அழிப்பு செய்தோம் என்பதை சிங்கள அரசு ஒப்புக் கொள்ளுகின்றதா?

போருக்குப் பின்னர், தமிழர்களின் தாயகத்தை கைப்பற்றிய சிங்கள அரசு, பல போர் வெறியை தூண்டும் நினைவுத் தூபிகளை தமிழர்களின் மண்ணில் அமைத்துள்ளது. கிளிநொச்சி டிப்போ சந்தியில், மாபெரும் போர் நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல புதுமாத்தளனின் போர் வெற்றி வெறியுடன் துடிக்கும் சிங்கள இராணுவத்தின் மிகப் பிரமாண்ட சிலை அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போல ஆனையிறவிலும் போரில் தமிழ் மக்களை அழித்த வெற்றியை வெளிப்படுத்தும் பாரிய தூபி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் தமிழர் நெஞ்சில் முள்ளாய் குத்திக் கொண்டிருக்கிறது.

போராட்டத்தில் ஈடுபட்டு மாண்ட போராளிகளின் துயிலும் இல்லங்களில் விளக்கேற்றும் உரிமையை இந்த ஆண்டு சிங்கள அரசு தடை செய்தது. நவம்பர் 27 அன்று எமது உறவுகள் கண்ணீர் விட்டு அழுது ஒரு தீபம் ஏற்றுவதால் புதைக்கப்பட்ட புலிகள் எழுந்து வருவார்கள் என்ற அச்சத்தில் மாவீரர் நாளை சிங்கள அரசு தடை செய்தது. இப்போது போரில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியையும் அழித்துள்ளது இலங்கை அரசு.

தமிழ் மக்களை இலங்கையர்கள் இல்லை என்று வெளிப்படுத்தும் இந்தப் போக்கு, தமிழ் மக்கள் அந்நிய ஆக்கிரமிப்பு அரசுக்குள் அடிமை கொள்ளப்பட்டுள்ளார்கள் என்பதையும் அவர்களுக்கு எந்த நேரத்தில் எதுவும் நடக்கலாம் என்பதையும் நன்றாக வெளிப்படுத்துகின்றது. இத்தகைய ஜேசிபிக்கள் நாளை கிராமங்களுக்குளற் நுழைந்து ஈழத் தமிழ் மக்களையும் மண்ணோடு மண்ணாக புதைத்து இன அழிப்பு செய்கின்ற இழிநிலைக்கு தள்ளப்பட்டாலும் எந்த ஆச்சரியமும் இல்லை என்பே இங்கே புலனாகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல மாணவர்கள் உயிர்தியாகம் செய்துள்ளனர். ஈழத் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் அவர்கள் தம் உயிரை ஈந்துள்ளனர். அதைப் போல பல பேராசிரியர்கள் தமது அறிவூழிப் பாதையில் நின்றபடி தேசியப் போராட்டத்திற்கு வழங்கிய ஒத்துழைப்புக்களும் அதற்காக சந்தித்த நெருக்கடிகளும் பலவுண்டு. துரைராஜா என்ற மாமனிதரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆளுமை மிக்க துணைவேந்தராக பணியாற்றி தனது பெயரை வரலாறாகப் பதித்துள்ளார்.

அத்தகைய மாமனிதர்களின் மத்தியில், ஒரு மனிதராக கூட இருக்கத் தவறியுள்ளார் சற்குணராஜா. அப்படி இருந்திருந்தால் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அழிப்பதற்கு அனுமதித்திருக்க மாட்டார். தனது அற்ப பதவிக்காக ஈழத் தமிழர்களின் இதயங்களை நொருக்கிய சற்குணராஜா தனது பதவிக்காக மாபெரும் துரோகத்தை இழைத்து தன் பெயரை தானே அழித்துள்ளார். யாழ் பல்கலைக்கழக சமூகத்திற்கு மாத்திரமின்றி, ஒட்டுமொத்த ஈழத் தமிழினத்திற்கே துரோகம் இழைத்த சற்குணராஜா உடனடியாக பதவி விலக வேண்டும்.

கடந்த காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மாணவர்களின் காப்பரணாக விளங்கியது. பல்கலைக்கழகத்திற்குள் மாணவர்களுக்கு பாதுகாப்பு இருந்தது. முன்னர் இருந்த துணைவேந்தர்கள் மாணவர்களை காக்கும் காவலரணாக செயற்பட்டுள்ளனர். ஆனால் சண்குணராஜாவோ, காட்டிக் கொடுக்கும் வேலையை செய்திருக்கிறார். சற்குணராஜாவை முழுச் சமூகமும் புறக்கணிக்க வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் அவரை பதவி விலக வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

அதேபோல இனிமேல் எந்தவொரு சமூக நிகழ்வுகளுக்கும் சற்குணராஜாவை அழைக்காமல் அவரை தனிமைப்படுத்த வேண்டும். இனத்திற்கு எதிரான, நினைவுகொள்ளுகின்ற பண்பாட்டுக்கு எதிரான ஒருவர் எந்த வித்திலும் முன்னுதாரணமற்றவர். அவரை புறக்கணிப்பதே அவருக்கான தண்டனை. தமிழ் சமூகம் வழங்கும் தண்டனைகளை கண்டு பதவிக் கதிரையில் இருக்காமல் சற்குணராஜா பதவி விலகுகின்ற நிலைக்கு அவரை தள்ள வேண்டும்.

அத்துடன் அழிக்கப்பட்ட கற்களை கொண்டு மீண்டும் நினைவுத் தூபி ஒன்றை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பதுடன் வடக்கு கிழக்கு முழுவதும் இதுபோன்ற நினைவுச்சின்னங்களை அமைக்க வேண்டும். பாடசாலைகளிலும் நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் இன அழிப்பின் சின்னங்களை அமைத்து சிங்கள அரசின் இன அழிப்பை இந்த உலகத்திற்கு அம்பலப்படுத்த வேண்டிய போராட்டங்களையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

தமிழகத் தலைவர்கள் பலரும் இந்த செயற்பாட்டுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். மனித தன்மையற்ற இந்த செயலை மனிதமுள்ள எவரும் கண்டிப்பர். சர்வதேச சமூகம் இதுபோன்ற செயல்களை வேடிக்கை பார்ப்பது வருத்தம் தருகின்றது. சிங்கள அரசின் கொடுமைகளுக்குள் ஈழத் தமிழினம் சிக்கி அழிவதை வேடிக்கை பார்க்காமல் உண்மையான மனிதாபிமானம் கொண்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுகின்ற தேவை அவசியமாகியுள்ளது. 2009இற்குப் பிறகு அப்படி பல அனுபவங்களை தமிழ் மக்கள் கண்ட போதும் அதற்கு எந்தவொரு தீர்வுகளும் முடிவுகளும் காணப்படவில்லை.

ஈழத் தமிழினம் எந்த நிலையில் இருக்கிறது என்பதையும் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி தகர்ப்பு வெளிப்படுத்தியுள்ளது. கற்களுக்கும் கட்டிடங்களுக்கும் இந்த நிலை என்றால் இங்குள்ள மனிதர்கள் எத்தகைய ஆபத்தின் மத்தியில் வாழ்கிறார்கள் என்பதை உலகம் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்களுக்கான எதனையும் அனுமதிக்காத ஸ்ரீலங்கா அரசுடன் ஈழத் தமிழர்கள் ஒருபோதும் சேர்ந்து வாழ முடியாது. தம்மை தாம் ஆளுகின்ற தமது மகிழ்ச்சியையும் துயரங்களையும் வெளிப்படுத்துகின்ற ஒரு வாழ்வு என்பது வடக்கு கிழக்கு என்ற தமிழர் மண்ணில் தனி ஆட்சியில்தான் சாத்தியம். இதுபோன்ற கொடூரச் செயல்களின் மூலம் சிங்களமும் அதையே உணர்த்துகிறது.

தீபச்செல்வன்

# கனடாவின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி யாழ் பல்கலைக்கழக நினைவுத்தூபி சம்பவத்தை கண்டிக்கின்றார்

கனடாவின் ஒரேயொரு தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி யாழ் பல்கலைக்கழக நினைவுத்தூபி இடிக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்துள்ளார். மேற்படி விடயம் தொடர்பாக அவர் அதிர்ச்சியடைந்த நிலையில் கருத்து தெரிவிக்கையில் பின்வருமாறு கூறுகின்றார்

"பல்கலைக் கழகங்களும் உயர் பாடசாலைகளும் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு மதிப்பளித்து மாணவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதை தங்கள் கொள்கைகளாக பேணவேண்டிய இடங்கள் ஆகும். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அவ்வாறான ஒரு இடமாகத் தெரியவில்லை. இந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி தகர்க்கபபட்ட சம்பவம் அதைத் தான் எமக்கு காட்கின்றது"



"Tearing down the memorial built to commemorate Tamils killed in the Mullivaikkal Genocide and to heal the wounds of the victims, their families, and the community is a despicable act by the Sri Lankan government.

The cycle of erasure and annihilation of Tamil identities, experiences, and history on the island has continued for years. Nearly 12 years after Mullivaikkal, the Sri Lankan government continues to actively erase and suppress the victims of the genocide. To end this cycle, accountability and justice must prevail.

Universities and School campuses, especially, have always been places where free speech and academic freedoms prevail, and the destruction of the memorial is a deliberate attack on the freedom of speech at the University of Jaffna.

I strongly condemn the destruction of the Mullivaikkal Memorial at the University of Jaffna and I call upon the Sri Lankan authorities to reinstate the memorial and allow students, faculty, and staff the freedom to mourn."

# "யாழ்பல்கலைக் கழக துணைவேந்தர் நினைவுத் தூபியை அதே இடத்திலேயே மீள அமைப்பேன் எனச் சொல்லியதை நாம் நம்பத் தயாராக இல்லை" தமிழ் சிவில் சமூக அமையம்

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் நினைவுத் தூபி அழிக்கப்பட்ட இடத்திலேயே மீள அதனை அமைப்பேன் எனச் உறுதி மொழி வழங்கிய வண்ணம் அடிக்கல் நாட்டியிருப்பதை நாம் நம்பத் தயாராக இல்லை. இனப்படுகொலையை நினைவு கூரும் தூபியை நீக்கி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டது போல 'சமாதானத்' தூபியோ அல்லது யுத்த வெற்றி தூபியோ அமைக்கப்படலாம் என நாம் அஞ்சுகிறோம். நாம் எப்படி எவ்வாறு எதனை நினைவு கூர வேண்டும் என்பதனை நாமே தீர்மானிக்க வேண்டும். இருந்த தூபி இருந்தவாறே மீள அமைக்கப்பட வேண்டும். வேறெந்த தீர்வும் திணிப்பே தவிர வேறொன்றும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் தமிழ் சிவில் சமூக அமையம். இவ்வாறு தெரிவித்திருக்கின்றது என்பதை நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும் யாழ். பல்கலைக்கழக நிலைமை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அமையம் இவ்வாறு தெரிவித்துள்ளது. இது குறித்த அவர்களுடைய அறிக்கையின் முழு விபரம் வருமாறு;

"யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்காலில் கொல்லப் பட்ட பொதுமக்களின் நினைவுச் சின்னம் அழிக்கப் பட்டமை தொடர்பாகத் தமிழ் சிவில் சமூக அமையத்தின் அறிக்கை

தற்போது ஆட்சியிலிருக்கும் அரசு தான் ஆட்சிக்கு வருவதற்கான பிரதான ஆயுதமாக பேரினவாதக் கருத்தியலையே கையிலெடுத்தது. ஆட்சிக்கு வந்த பின்னர், அதே கருத்தியலின் வழி நின்று தன்னைச் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமான அரசு என்பதைச் சொல்லிலும் செயலிலும் நிரூபித்து வருகிறது. எண்ணிக்கையில் குறைவான பிற தேசிய இனத்தவர்களுக்கு எதிரான கருத்தியலைச் சிங்கள பௌத்த மக்களின் மத்தியில் பரவலாக்கி, அவர்கள் வழங்கும் தார்மீக ஆதரவில், பிற தேசிய இனங்களை அடக்கி, ஒடுக்கி, பலவீனப் படுத்தி, அகற்றும் செயற்திட்டத்தை முழு அளவில் முடுக்கி விட்டுள்ளது.

நில அபகரிப்பு, வளச் சூறையாடல், பௌத்த மத விரிவாக்கம், தொல்லியல் மையங்கள் என்ற போர்வையில் பிற தேசிய இனங்களின் பாரம்பரிய வாழ்புலத்துக்குள்ளான அத்துமீறிய நுழைவு, வரலாற்று அடையாளங்களை அழித்தல், திரிவுபடுத்தல், போலியானவற்றை உருவாக்கல், மற்றைய இன, மதத்தவரின் ஆடை முறை, இறுதிச் சடங்குகள் உள்ளிட்ட பண்பாட்டு, வாழ்வியல் முறைகளைத் தடை செய்தல், அரச துறைகளில் இராணுவத்தினரின் மிதமிஞ்சிய உள்நுழைப்பு, நினைவு கூரும் உரிமை



மறுதலிப்பு என பல்பரிமாணப் பேரினவாத நிகழ்ச்சித் திட்ட்மொன்றை அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. இத்திட்டத்தின் ஆகப் பிந்திய அரங்கேற்றமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் மாணவர்களால் அமைக்கப் பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம், பல்கலைக் கழக நிர்வாகத்தினரால், காவற்றுறை, இராணுவம் இணைந்து வழங்கிய இறுகிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், இரகசியமாக, இரவோடிரவாக அழித்தொழிக்கும் நிகழ்வு நடந்தது.

அனுமதி வழங்கப் படாத கட்டுமானம் என்பதனால், மேலிட உத்தரவுகளுக்கமைய அந்த நினைவுச் சின்னம் அழிக்கப் பட்டது என்ற தொழில்நுட்பக் காரணத்தை முதலில் வழங்கிய பல்கலைக்கழகத் துணை வேந்தர், பின்னர் பல்லின மாணவர்கள் கல்வி கற்கும் இடத்தில் இது வேண்டத் தகாதது என்ற கருத்தியல் நியாயப் படுத்தலையும் வழங்கியிருந்தார். மேலிட உத்தரவுகளுக்கமைய அந்த நினைவுச் சின்னம் அழிக்கப் பட்டது என்ற துணைவேந்தரின் கூற்றினைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும், இராணுவத் தளபதியும் தனித்தனியாக மறுத்துரைத்திருந்தனர். போரின் நினைவுச் சின்னங்கள் தேவையில்லை, நல்லிணக்கத்திற்கான நினைவுச் சின்னங்களே தேவை எனக் குறிப்பிட்டு, இதனையும் போரின் நினைவுச் சின்னமாகக் கருதி, இவ்வாறான நினைவுச் சின்னங்கள் இன நல்லுறவைப் பாதிக்கும் என்பதனால் அவை தேவையற்றவை, அகற்றப்பட வேண்டியவையே என்ற கருத்தையும் ப.மா. ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார்.

நாடெங்கிலும் பொதுவாகவும், வடக்குக் கிழக்கில் குறிப்பாகவும் எண்ணுக் கணக்கற்று நிறைந்திருக்கும், குரூரமாக வெல்லப் பட்ட யுத்தத்தின் வெற்றிச் சின்னங்கள் குறித்தோ, ஒவ்வொரு வருடமும் கோலாகலமாகக் கொண்டாடப் படும் யுத்த வெற்றி விழா குறித்தோ, அவை பாதிக்கப் பட்ட மக்களின் மனங்களில் மீள மீள ஏற்படுத்தும் காயங்கள் குறித்தோ, ஒரு வித சிறு குறிப்பிடலும் இல்லாது, போரின் இறுதி நாட்களில் இறந்த பொது மக்களின் நினைவாக எழுப்பப் பட்ட ஒரு சிறு நினைவுச் சின்னம், இன நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்ற பேரினவாதச் சிந்தனையை எது வித வெட்கமுமற்று ப.மா. ஆணைக்குழுவின் தலைவர் வெளிப்படுத்தினார்.

கொத்துக் கொத்தாகக் கொல்லப் பட்ட தமது உறவுகளைத் தனியாகவும், கூட்டாகவும் நிறைவாக நினைவு கூரும் சந்தர்ப்பமும், அதற்கான தடையற்ற உரிமையும் ஏற்படுத்தக் கூடிய ஆற்றுப் படுத்தலின் விளைவாக உருவாகக் கூடிய நல்லிணக்கச் சிந்தனைகளுக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதா அல்லது அனுமதி வழங்கப் படாது கட்டப் பட்டது என்பதனால் சட்டத்தை அமுலாக்குதல் என்ற போர்வையில், எவருக்கும் எந்த இடையூறும் விளைவிக்காது, ஒரு சிறிய இடத்தில் அமைந்திருந்த நினைவுச் சின்னத்தை, இடித்தழித்து ஏற்கனவே இழப்பின் வலிகளால் துடித்துக் கொண்டிருக்கும் கூட்டு உளவியலின் மீது இன்னுமொரு காயத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தை வழங்குவதா விருப்பத் தெரிவாக இருந்தது என்பது இதன் மூல காரணர்களது நிகழ்ச்சி நிரலைத் தெளிவுபடுத்தி நிற்கிறது.

சட்டத் துறை, கல்வித் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும், பேரினவாதக் கருத்தியலுடன் ஒத்தியங்க முடியாதவர்கள் தொடர்ச்சியான பழிவாங்கல்களுக்குட்பட்டு வரும் அழுகலாட்சி முறையின் விளைவாக, அனைத்துத் துறைகளிலும் பிறழ்வு மனநிலையுடைய அலுவலர்கள் உருவாகியிருக்கிறார்கள். சமூகத்தின் மனச்சாட்சியாகவும், குரலாகவும் இருக்க வேண்டிய இவர்கள், அப்பட்டமான சுய இலாபங்களுக்காக, மானுட நீதியைப் புறமொதுக்கும் சமூக அநீதியாளர்களாக மாறிவிட்டனர். நினைவுச் சின்ன அழிப்பிற்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள் மீது கனரக வாகனத்தை ஏற்றுமாறு கூறிய பலகலைக்கழகப் பதிவாளர், எதிர்ப்பதை நிறுத்தாவிட்டால் 'உரிய வழியில்' அதனை நிறுத்தப் போவதாக எச்சரித்த துணை வேந்தர் என்போர் சமூக அநீதியாளர்களாகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட அண்மைய உதாரணர்கள்.

பேரினவாத அரசு தமது பேரினவாத நிகழ்ச்சி நிரலினை நிறைவேற்றுவதற்கு தமிழ்ப் பொது ஊழியர்களையே ஒரு கருவியாக பயன்படுத்துவதை ஒரு வழமையாக ஆக்கி விட்டனர். ஒரு பேரினவாத அரசின் கட்டமைப்பிற்குள் ஒடுக்கப்படும் சமூகத்தை சேர்ந்த பொது ஊழியர்களின் கடமை, பொறுப்பு ஆகியன தொடர்பில் பொதுக் கலந்துரையாடல் அவசியம். நாம் ஏற்காத முறைமைக்குள்ளிருந்தும் நாம் எவ்வாறு செய்யப்படுவது என்பது தொடர்பில் தெளிவும் அவதானமும் தேவை.

விஷேட பதிப்பு

Special Edition

உதயன் UTHAYAN www.canadauthayan.ca

# கனடா உதயன்

## வெள்ளி விழா ஆண்டு 2021

வெள்ளி விழா 25th ANNIVERSARY www.uthayannews.ca உதயன் UTHAYAN

உலகளாவிய மாணவர்களுக்கான இணையவழி ஊடான

# பேச்சுப் போட்டி

## நான் விரும்பும் அரசியல் தலைவர்


POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
Shankar Nallathamby, CHA
Director
shankar@vhgcanada.com
www.vibranthospitalitygroup.com
Toll free: 1 888 674 7770 | Local: 905 769 1509


இங்கு காணப்படும் தமிழ்த் தலைவர்களிலிருந்து தங்களுக்கு பிடித்தமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பற்றி **5 நிமிடங்களுக்கு** மேற்படாமல் பேச வேண்டும். போட்டி ZOOM செயலியூடாக **பெப்ரவரி 27. 28 தினங்களில்** நடைபெறும். கனடா, இந்தியா, அமெரிக்கா, மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நடுவர்கள் வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பார்கள். இவர்களோடு கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சேர்ந்து எடுக்கும் இறுதி முடிவிற்கு ஏற்பவே பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.




## நிபந்தனைகள்

1. உலகின் எப்பாகத்திலும் வாழும் 20 வயதிற்கு உட்பட்ட தமிழ் பேசும் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம் (வயதை உறுதிப்படுத்தும் பத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

2. இங்கு காணப்படும் தலைவர்களில் தாம் விரும்பும் ஒருவரைப் பற்றி மட்டும் ஐந்து நிமிடத்திற்கு மேற்படாமல் பேசவேண்டும்

3. போட்டிக்கான உரையை அவர்களாகவோ அன்றி மற்றவர்களின் உதவியுடனோ தயாரிக்கலாம்.

4. இறுதிப் போட்டிக்கு முன்பதாக தேவையேற்படின் முதற்சுற்றுப் போட்டியில் பங்குபற்றவும் தயாராக இருக்க வேண்டும்.

5. போட்டி இடம்பெறும் இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு நாளில் போட்டியில் பங்கு பற்ற தயாராக இருக்க வேண்டும்.

6. பேச்சுப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் பின்வரும் விபரங்களை uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சலுக்கோ அன்றி 1 (416) 732 1608 / 1 (416) 587 0552 என்னும் இலக்கத்தில் WhatsApp இற்கோ அனுப்பி வைக்க வேண்டும்.
மாணவரின் முழுப் பெயர், மாணவரின் வயது, கல்வி கற்கும் பாடசாலை அல்லது பல்கலைக் கழகம், தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம், தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் விலாசம்:- (பெற்றோர் அல்லது பாதுகாவலர் விபரங்களும் இணைக்கப்படலாம்)

7. விபரங்கள் எமக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் பெப்ரவரி 12, 2021 வெள்ளிக்கிழமையாகும். அந்த திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. பரிசு பெறும் மாணவர்களுக்கு பணத்தொகையும் சான்றிதழ்களும் நேரிலோ, தபால் மூலமாகவோ அல்லது வங்கி கணக்கு ஊடாகவோ அனுப்பி வைக்கப்படும்.

## நடுவர்கள்

பேராசிரியர் சங்கரநாராயணன் (தமிழ்நாடு)
வழக்கறிஞர் தி. இராமகிருஸ்ணன் (தமிழ்நாடு)
திரு ஆர். சர்வேஸ்வரா (இலங்கை)
திரு குயின்ரஸ் துரைசிங்கம் (கனடா)
திரு நிமால் விநாயகமூர்த்தி (கனடா)
திரு. வீணைமைந்தன் சண்முகராஜா (மொன்றியால்-கனடா)

## பரிசுகள்

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு | ஐந்து ஆறுதல் பரிசுகள் |
|---|---|---|---|
| 300 கனடிய டொலர்கள் | 200 கனடிய டொலர்கள் | 100 கனடிய டொலர்கள் | 50 கனடிய டொலர்கள் |

### zoom பெப்ரவரி 27, 2021 சனிக்கிழமை

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 812 3636 6126 | Passcode: 962261**

### zoom பெப்ரவரி 28, 2021 ஞாயிற்றுக்கிழமை

கனடா/அமெரிக்கா - காலை 9:00 | இலங்கை/இந்தியா - இரவு 7:30
ஐரோப்பா - மாலை 3:00 | அவுஸ்ரேலியா - அதிகாலை 1:00
**Meeting ID: 827 6566 9766 | Passcode: 892482**

**சமர்ப்பிக்கவேண்டிய இறுதி திகதி: பெப்ரவரி 12, 2021**
மின்னஞ்சல்: uthayannews@yahoo.com
WhatsApp: +1 (416) 732 1608/+1 (416) 587 0552


102.7 east FM தமிழ் | உலகத்தமிழர் | ஈழநாடு | yugam radio | Roobam FM Toronto Digital Radio | ஈழமுரசு

SANTHA PLUMBING & DRAINAGE SERVICES
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
www.santha.ca 416-200-5470
Santha Electical,Plumbing and drainage service Residential Commercial and industrial All Repairs & Renovations
Santha Plumbing and drainage service
Tel : 416 200 5470
info@santha.ca
www.santha.ca
Santha Panchalingam

CAMSONICS SECURITY SYSTEMS.INC
NO.1 NORTH AMERICAN PROFESSIONAL SECURITY COMPANY
WE ONLY DO PROFESSIONAL INSTALLATIONS AND CONCEAL WIRES IN THE ATTIC OR BEHIND THE WALLS
FULL HD
PROTECT YOUR HOME AND BUSINESS ANY TIME ANY WHERE IN THE WORLD
Rajeev Sebarasha :- 647.302.5748
Web: www.camsonics.com E-Mail: camsonics@gmail.com

FRUITS HABY
மொன்றியல் மாநகரில் பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு புகழ்பெற்ற தமிழர் பலசரக்கு மாளிகை
5925 Victoria Ave, Montreal, QC H3W 2R9

Dir: (647) 668-8276
Bus: (905) 201-9977
HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE
For all your Real Estate needs...
Buyers and Sellers - I will pay your Lawyer Fees and Moving Charges!
VALLIKKANNAN MARUTHAPPAN Sales Representative
Direct: 416-880-6051 Bus: 416-298-3200
www.mvkhome.ca

வீடு விற்க! வாங்க
Award winning Agents will give you Professional, Reliable and Friendly Services
We can arrange Mortgage, Second Mortgage and Refinance.
ROYALAN TEAM
" Our clients are our value"
Ragu Thillainathan 416-629-5800
Kailain Thillainathan 647-668-8276
kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com